Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/28.7.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 28.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்தை இந்தியா கொஞ்சமும் சகித்துக் கொள்ளாது என்பதைத் தெளிவுபடுத்துவதே, ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

பிஎஸ்என்எல் நிறுவனத்தின் சந்தாதாரர் எண்ணிக்கை, சுமார் 9 கோடியாக அதிகரித்து இருப்பதாக, இருப்பதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் முதியோர் உதவித் தொகைக்கு விண்ணப்பித்துள்ள 10 ஆயிரம் பேருக்கு, அடுத்த மாதம் உதவித் தொகை வழங்கப்படும் என முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் முதல் முறையாக, மேட்டுப்பாளையம் இரா.சீனுவாசன் அரசு உயர்நிலைப் பள்ளி, ISO சான்றிதழ் பெற்ற பள்ளியாக உருவெடுத்துள்ளது.

நாடாளுமன்றம்

மக்களவையில், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து இன்று சிறப்பு விவாதம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் விவாதங்களை தொடக்கி வைத்துப் பேசுகையில், தீவிரவாதத்தை இந்தியா கொஞ்சமும் சகித்துக் கொள்ளாது என்பதை பாகிஸ்தானுக்கு தெளிவுபடுத்துவதே, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் நோக்கம் என்றார். பாதுகாப்பு அமைச்சரின் உரை குறித்து மேலும் சில விவரங்கள் …………

(வாய்ஸ்)

நாடாளுமன்றம்

(வாய்ஸ்)

ஆபரேஷன் சிந்தூர், இந்தியாவின் இறையாண்மை, தீவிரவாதத்திற்கு எதிரான கொள்கை, மற்றும், மக்கள் மீது அரசுக்குள்ள பொறுப்புணர்வின் அடையாளமே தவிர, வெறும் ராணுவ நடவடிக்கை அல்ல என்று திரு ராஜ்நாத் சிங் கூறினார்.. பகல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து இந்திய ராணுவம் மேற்கொண்ட இந்நடவடிக்கையின் போது, இந்திய ராணுவத்தினர், 9 தீவிரவாத முகாம்களை துல்லியமாக தாக்கி அழித்து இருப்பதாகவும், நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இந்தியாவின் வான் பாதுகாப்பு கட்டமைப்பும்,

டிரோன் எதிர்ப்பு வசதிகளும் திறம்பட்ட முறையில் செயல்பட்டது நாட்டிற்கே பெருமை என்று, பாதுகாப்பு அமைச்சர் கூறினார். இந்திய இலக்குகள் எதையும் தாக்க பாகிஸ்தானால் கொஞ்சமும் இயலவில்லை என்றும், இந்தியாவின் கடல் வழித் தாக்குதல் வாய்ப்புகளுக்கு அஞ்சியே, பாகிஸ்தான் சரண் அடைந்ததாகவும் அவர் தெரிவித்தார். தீவிரவாதமும் பேச்சு வார்த்தைகளும் ஒன்றாக நீடிக்க முடியாத என்ற நிலைப்பாட்டில், பிரதமர் திரு நரேந்திர மோடியும், அரசும், மிகவும் தெளிவாக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னதாக, பீகார் மாநிலத்திற்கான சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகள் உட்பட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக, எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக இருஅவைகளும் மீண்டும் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவை, பிற்பகல் 2 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மாநிலங்களவையில் அஇஅதிமுக-வைச் சேர்ந்த திரு தனபால், திரு இன்பதுரை ஆகியோர் உறுப்பினர்களாக இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

*பீகார் பட்டியல்*

*பீகாரில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை திட்டமிட்டபடி ஆகஸ்டு 1-ஆம் தேதி தேர்தல் ஆணையம் வெளியிட தடை இல்லை என்று*

உச்சநீதிமன்றம் கூறி உள்ளது. இது வரைவுப் பட்டியல் தான் என்றும் சட்ட விரோத அம்சங்கள் ஏதேனும் பிற்பாடு தெரிய வந்தால், பட்டியலை செல்லுபடியற்றதாக அறிவிக்க முடியும் என்றும் நீதிபதிகள் திரு சூரியகாந்த், திரு ஜாய்மால்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று கூறியது. நிர்வாக காரணங்களால் இன்றைய தினம் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் பிரச்சனை குறித்து கூடிய விரைவில் விசாரிக்கப்படும் என நீதிபதி திரு சூர்யகாந்த் மனுதாரர்களுக்கு உறுதி அளித்தார். நாளை வாத பிரதிவாதங்களை செவி மடுக்க எவ்வளவு நேரம் ஆகும் என்பதை மதிப்பிட்டு தெரிவிக்குமாறு வழக்கறிஞர்களை அவர் கேட்டுக் கொண்டார். வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட அனுமதித்தால், சுமார் நாலரை கோடி வாக்காளர்களுக்கு அசவுகரியம் ஏற்படும் என்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், முன்னதாக நீதிமன்றத்தில் கூறினார்.

*சிந்தியா*

பொதுத் துறை பிஎஸ்என்எல் நிறுவனம் கடந்த நிதியாண்டின் 3-ஆவது மற்றும் 4-ஆவது காலாண்டுகளில் முறையே 260 கோடி ரூபாய் மற்றும் 280 கோடி ரூபாய் நிகர லாபம் ஈட்டி இருப்பதாக மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார். பிஎஸ்என்எல் வட்டார தலைமை பொது மேலாளர்களுடன் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற மறுஆய்வு கூட்டத்திற்கு பின்னர்

செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார். கடந்த நிதியாண்டில் பிஎஸ்என்எல் நிறுவனத்தின் மூலதனச் செலவுகள், அதன் வரலாற்றிலேயே மிக அதிகமாக, சுமார் 25 ஆயிரம் கோடி ரூபாயாக பதிவாகி இருப்பதாக அவர் கூறினார். கடந்த ஆண்டு ஜுன் மாதம் 8.55 கோடியாக இருந்த பிஎஸ்என்எல் சந்தாதாரர் எண்ணிக்கை, தற்போது சுமார் 9 கோடியாக அதிகரித்து இருப்பதாக, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*ஸ்ரீநகர்-தீவிரவாதி*

பகல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய 3 தீவிரவாதிகளை இன்று ஜம்மு-காஷ்மீரில் இந்திய ராணுவத்தினர் என்கவுண்டரில் சுட்டுக் கொன்றனர். ஆபரேஷன் மகாதேவ் ராணுவ நடவடிக்கையின் கீழ் ஸ்ரீநகரின் ஹர்வான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் பணிகளின் போது இந்த மோதல் ஏற்பட்டது. தேடுதல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

*ரங்கசாமி-முதியோர்*

புதுச்சேரியில் முதியோர் உதவித் தொகைக்கு விண்ணப்பித்துள்ள 10 ஆயிரம் பேருக்கு, அடுத்த மாதம் உதவித் தொகை வழங்கப்படும் என முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தவளக்குப்பத்தில் இன்று நடைபெற்ற

விழாவில், மணவெளி குப்பம் திம்மநாயக்கன் பாளையம், மற்றும், பாகூர் தொகுதி மணப்பட்டு கிராமத்தில் துறை மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை முதல் கட்டமாக 312 பேருக்கு வழங்கி, அவர் உரையாற்றினார். புதுச்சேரியில் 90 சதவிகித குடிசை வீடுகள், கல் வீடுகளாக மாற்றப்பட்டுள்ளதாகவும், குடிசைகளே இல்லாத மாநிலமாக புதுச்சேரி மேம்பட வேண்டும் என்பதே அரசின் எண்ணம் என்றும் அவர் கூறினார். புதுச்சேரியில் ஆயிரம் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என அவர் தெரிவித்தார். சட்டப் பேரவையில் அறிவித்தபடி, அரசிடம் எந்த உதவித் தொகையும் பெறாத, மஞ்சள் அட்டை வைத்துள்ள குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறினார்.முதலமைச்சரின் உரையில் இருந்து ஒரு பகுதி........

(வாய்ஸ்-ரங்கசாமி)

*ரங்கசாமி-முதியோர்*

சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், இவ்விழாவில் பேசுகையில், புதுச்சேரியில் வீடில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பல ஆண்டுகளாக இலவச மனைப்பட்டா வழங்கப்படாத நிலையில், நடப்பு அரசு தான் தகுதி அடிப்படையில் இலவச மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுத்து இருப்பதாக கூறினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே எஸ் பி ரமேஷ், திரு செந்தில் குமார், அரசுச் செயலர் டாக்டர் முத்தம்மா மற்றும் அதிகாரிகள் பலரும், விழாவில் கலந்து கொண்டனர்.

*ரங்கசாமி-சமுதாயக் கூடம்*

புதுச்சேரியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான சிறப்பு கூறுகள் திட்ட நிதி மூலம், கரிக்கலாம்பாக்கம், திருபுவனை பெரியபேட், மற்றும் வேல்ராம்பட்டில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள, பல்நோக்கு சமுதாய நலக் கூடங்களை, இன்று, முதலமைச்சர் ரங்கசாமி திறந்து வைத்தார். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மற்றும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும், அரசுச் செயலர் டாக்டர் முத்தம்மா மற்றும் இதர அதிகாரிகளும், இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மற்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு வரைநிலைக் கழகம் மூலம், கரிக்கலாம் பாக்கதில், 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பிலும், திருபுவனை பெரிய பேட்டில், 2.67 கோடி ரூபாய், மற்றும், வேல்ராம்பட்டில் 1.49 கோடி ரூபாய் மதிப்பிலும், புதிய சமுதாய நலக் கூடங்கள், கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

*புதுச்சேரி-உலகத் தரம்*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் முதல் முறையாக, மேட்டுப்பாளையம் இரா.சீனுவாசன் அரசு உயர்நிலைப் பள்ளி, ISO உலக தரச் சான்றிதழ் பெற்ற பள்ளியாக உருவெடுத்துள்ளது. இதுதொடர்பாக பள்ளி வளாகத்தில் இன்று நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு, உலகத் தர சான்றிதழை, பள்ளிக்கு வழங்கினார். பள்ளி வளாகத்தில் கணித ஆய்வகம், திறந்தவெளி நூலகம், மற்றும் QR- Code

மூலமான மாணவர் சேர்க்கை உள்ளிட்ட வசதிகளையும் முதலமைச்சர் தொடக்கி வைத்தார். பள்ளி மாணவர்களுக்கு சீருடைகளையும் அவர் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் திரு கேஎஸ்பி ரமேஷ், பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் அமன்சர்மா, மற்றும், இதர அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*பிஆர்டிசி*

புதுச்சேரியில், பணி நிரந்தம், 7-ஆவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளின் அமலாக்கம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, பிஆர்டிசி ஊழியர்கள் வேலை நிறுத்தம் தொடக்கி இருப்பதால், இன்று கடலூர், விழுப்புரம், சென்னை, திருவண்ணாமலை போன்ற பகுதிகளுக்கு, அரசுப் பேருந்துகள் இயக்கப்படவில்லை. புதுச்சேரி, காரைக்கால், மாகே மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள பிஆர்டிசி பணி மனைகளில் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஊழியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*வானிலை*

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, ஆகஸ்டு 3-ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும், நாளையும் ஓரிரு இடங்களில், மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த

தரைக்காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, கோவை மாவட்டம் சின்ன கல்லார், நீலகிரி மாவட்டம் நடுவட்டம் ஆகிய இடங்களில் தலா 4 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*சதுரங்கம்*

ஜார்ஜியாவில், FIDE மகளிர் உலக கோப்பை சதுரங்க போட்டிகளின் இறுதிப் போட்டியில், இந்தியாவின் திவ்யா தேஷ்முக், சக வீராங்கனை கோனேரு ஹம்பியை, இன்று நடைபெற்ற 2-ஆவது ராபிட் டை-பிரேக்கர் ஆட்டத்தில் தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். இதன் மூலம், கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றுள்ள 4-ஆவது இந்திய வீராங்கனையாக, திவ்யா தேஷ்முக் மேம்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*காரைக்கால்-பருத்தி*

காரைக்கால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வாராந்திர பருத்தி ஏலத்தில், காரைக்கால் விவசாயிகளின் சுமார் 100 குவிண்டால் பருத்தி, சராசரியாக குவிண்டாலுக்கு 7 ஆயிரத்து 384 ரூபாய் விலையில், வியாபாரிகளால் ஏலம் எடுக்கப்பட்டது.

வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும் இந்த மறைமுக ஏலத்தில் பருத்தி விவசாயிகள் அனைவரும் பங்கேற்று பயன்பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுவதாக, காரைக்கால் விற்பனைக் குழுவின் செயலர் திரு செந்தில் குமார் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*அமர்நாத் யாத்திரை*

ஜம்மு-காஷ்மீரில் இம்மாதம் 3-ஆம் தேதி முதல் நடைபெற்று வரும் அமர்நாத் யாத்திரையில் இதுவரை 3.77 லட்சம் யாத்திரிகர்கள் பங்கேற்றுள்ளனர். ஸ்ரீநகரில், **தஷ்நாமி அக்காரா** வளாகத்தில் உள்ள அமரேஸ்வரர் கோவிலில் நேற்று நடைபெற்ற, Chhari **ஸ்தாபன** சடங்குகளைத் தொடர்ந்து, நாகபஞ்சமி தினமான நாளை, Chhari பூஜை நடைபெறும் என்றும், அதன் பின்னர், அமர்நாத் குகைக் கோவிலுக்கான Chhari முபாரக் யாத்திரை, ஆகஸ்டு 4-ஆம் தேதி தொடங்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*கூட்ட நெரிசல்*

உத்தரபிரதேஷ் மாநிலம் பாராபங்கி பகுதியில் உள்ள அவுசானேஸ்வர மகாதேவர் கோவிலில், சிராவண மாதத்தின் 3-ஆம் திங்கட்கிழமையான இன்று அதிகாலை தரிசனத்திற்காக பக்தர்கள் கூடியிருந்த தகரக் கொட்டகை மீது, மின்சாரக் கம்பி அறுந்து விழுந்ததால் ஏற்பட்ட, கூட்ட நெரிசல் சம்பவத்தில், 2 பேர் உயிரிழந்தனர், 17 பேர் காயமடைந்தனர். மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் சம்பவம் குறித்து துயரம்

வெளியிட்டுள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவிக்கப் பட்டுள்ளது. காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவும் முதலமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------